வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 21.05.2026 – வியாழக்கிழமை            நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- நாட்டில், கச்சா எண்ணெய், பெட்ரோல்—டீசல், மற்றும், எல்பிஜி விநியோகம் போதிய அளவில் இருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்திய மோட்டார் வாகன உற்பத்தி துறையை உலகின் முதல் இடத்திற்கு உயர்த்துவதே, அரசின் நோக்கம் என்று, மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.
- தமிழக அமைச்சரவையில் இன்று, 23 புதிய அமைச்சர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.
- முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளான இன்று புதுச்சேரியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் உள்ளிட்டோர், ராஜீவ்காந்தி சிலைக்கு  மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

<u>*பெட்ரோல் நிலவரம் -1 (09)*</u>

நாட்டில், கச்சா எண்ணெய், பெட்ரோல்—டீசல், இயற்கை எரிவாயு, மற்றும், எல்பிஜி விநியோகம் போதிய அளவில் இருப்பதாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற அளவில் செயல்பட்டு வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, தற்போது தினசரி 46 முதல், 47 ஆயிரம் டன் எல்பிஜி உற்பத்தி செய்யப்படுவதாக, பல்வேறு மத்திய அமைச்சகங்கள் இணைந்து, இன்று புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

*பெட்ரோல் நிலவரம் -2 வாய்ஸ் (18)*

(வாய்ஸ்)

கடந்த 3 நாட்களில் வீட்டுப் பயன்பாட்டிற்கான 1 கோடியே 34 லட்சம் எல்பிஜி சிலிண்டர்களும், இம்மாதம் 1ஆம் தேதி முதல் 1 லட்சத்து 32 ஆயிரம் டன் வர்த்தக எல்பிஜி எரிவாயுவும் விநியோகிக்கப் பட்டுள்ளதாக, மத்திய பெட்ரோலியத் துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா ஷர்மா தெரிவித்தார். கடந்த மார்ச் மாதம் முதல் 7.6 லட்சம் வீடுகளுக்கு குழாய் மூலமான எரிவாயு இணைப்பு வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அனைத்து பெட்ரோல் விற்பனை நிலையங்களிலும், போதிய கையிருப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், மக்கள் பீதி அடிப்படையில் எரிபொருள் வாங்க வேண்டாம் என்றும், எரிபொருள் நுகர்வில் சிக்கனத்தைக் கடைபிடித்தால் போதுமானது என்றும் அவர் குறிப்பிட்டார். மத்திய கப்பல் துறை கூடுதல் செயலர் திரு. முகேஷ் மங்கள், இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், இந்தியக் கப்பல்களின் சுமுகமான இயக்கத்தையும், இந்தியக் கடலோடிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த, இந்தியத் தூதரகங்கள் உட்பட பல்வேறு தரப்பினருடன் ஒருங்கிணைந்து, தாங்கள் செயல்பட்டு வருவதாக கூறினார். கடந்த 72 மணி நேரத்தில், இந்தியக் கப்பல்கள், அல்லது, இந்திய சிப்பந்திகளுடன் கூடிய வெளிநாட்டுக் கப்பல்கள் தாக்கப்பட்டதாக தகவல் எதுவும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

*மாநாடு (11)*

இந்திய மோட்டார் வாகன உற்பத்தி துறையை உலகின் முதல் இடத்திற்கு உயர்த்தும் நோக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி கூறியுள்ளார். தற்போது இத்துறை, உலகின் 3ஆவது இடத்தில் இருப்பதாக, இன்று புதுடெல்லியில், AMCHAM தொழில்—வர்த்தக கழகத்தின் வருடாந்திர தலைமைத்துவ மாநாட்டில் பேசுகையில் அவர்

தெரிவித்தார். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறித்த கணிப்பு, 6.5 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு இருப்பது, உலக நெருக்கடிக்கு இடையிலும், இந்தியர்களின் வலு குறையவில்லை என்பதையே எடுத்துக்காட்டுவதாக மத்திய தொழில்—வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இம்மாநாட்டில் ஆற்றிய உரையில் கூறினார்.

*ரசாயனம் (12)*

நாட்டின் ஒட்டு மொத்த தொழில் துறை வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள ரசாயனத் துறையில், 2040ஆம் ஆண்டிற்குள்,10 மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாக முடியும் என்று, மத்திய ரசாயனத் துறை செயலர் திரு. தேஜ்வீர் சிங் கூறியுள்ளார். அசோச்சேம் தொழில்—வர்த்தக கூட்டமைப்பு சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, சிறப்பு ரசாயனங்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்திய ரசாயனத் துறையின் மதிப்பை, ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்தும் நோக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். மேற்காசிய நெருக்கடிக்கு இடையில், இந்திய ரசாயனத் துறையின் நலன்களைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும், சுயசார்பு இலக்கை இந்தியா எட்டுவதில், ரசாயனத் துறையின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

*வைஷ்ணவ் ரயில்வே (11)*

ரயில்வே அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியல், கள நிலை ரயில்வே அதிகாரிகளுடன், பாதுகாப்பு குறித்து மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். ரயில் பெட்டியில் தீப்பிடித்த அண்மைச் சம்பவங்களில், சமூக விரோதிகளின் கை இருப்பதாக பூர்வாங்க விசாரணையில் தெரிய வந்திருப்பதை அதிகாரிகள் இக்கூட்டத்தில் எடுத்துக் கூறினர். ரயில்வே துறையில் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கான புலனாய்வுத் தகவல்களை களத்தில் இருந்து, சேகரிக்கத் தேவையான வசதிகளை

வலுப்படுத்துவது குறித்து, கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. ரயில்வே கட்டமைப்பில் சிசி டிவி கேமரா மற்றும் AI கண்காணிப்பு வசதிகளை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

***பரம்பரை நோய் (15)***

பரம்பரையாக வரும் மரபணு கோளாறுகளை பிரத்யேகமான முறையில் நிர்வகிப்பதற்கான, மத்திய உயிரி—தொழில்நுட்பத் துறையின் U-MM-ID வலைப் பின்னல் கட்டமைப்பை, மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். பரம்பரை நோய்களுக்கான வாய்ப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து, உரிய ஆலோசனைகள் மூலம் ஒருங்கிணைந்த முறையில் இத்தகைய நோய்களைத் தடுப்பதற்கான, நாட்டின் முதலாவது தேசிய முன் முயற்சியாக இத்திட்டம் அமைந்துள்ளது. குறைந்த கட்டணத்தில், அனைவரும் எளிதில் அணுகத் தக்க மருத்துவ வசதிகளை நாட்டு மக்களுக்கு வழங்குவதே, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் முன்னுரிமை என்று, அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். புதிதாகப் பிறக்கும் பச்சிளங் குழந்தைகள், இத்திட்டத்தினால் குறிப்பாக பயன் பெறுவார்கள் என்று, உயிரி—தொழில்நுட்பத் துறைச் செயலர் திரு.ராஜேஷ் கோகலே தெரிவித்தார்.

***தமிழ்நாடு அமைச்சரவை -1 (04)***

தமிழகத்தில், முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையிலான அமைச்சரவை இன்று விஸ்தரிக்கப் பட்டது. புதிதாக 23 அமைச்சர்கள் பதவியேற்றுள்ளனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 2 அமைச்சர்களும் இதில் அடங்குவர்.

***தமிழ்நாடு அமைச்சரவை-2 வாய்ஸ் (09)***

(வாய்ஸ்)

சென்னை லோக் பவனில் இன்று நடைபெற்ற விழாவில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.வி.அர்லேக்கர், புதிய அமைச்சர்களுக்கு, பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், விழாவில் கலந்து கொண்டனர். புதிய அமைச்சர்களையும் சேர்த்து, தமிழகத்தில் அமைச்சரவையின் வலு 32ஆக அதிகரித்துள்ளது. அமைச்சரவையில் 4 பெண் அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். தமிழகத்தில் சுமார் 60 ஆண்டுகளுக்குப் பின்னர், அமைச்சரவையில் காங்கிரஸ் இடம்பெறுவதும், குறிப்பிடத் தக்கது.

***புதுச்சேரி ராஜீவ் (13)***

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளான இன்று புதுச்சேரியில், ராஜீவ் காந்தி சதுக்கத்தில் உள்ள அன்னாரின் சிலைக்கு, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ராஜவேலு, திரு. சாய் சரவணன் குமார், திரு. சிவக்கொழுந்து, திரு.ஏ.கே.டி. ஆறுமுகம், திரு. அழகு என்கிற அழகானந்தம், திரு.நாராயணசாமி, திரு. ரவிகுமார், மற்றும், தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின் போது, வன்முறை எதிர்ப்பு தின உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப் பட்டது. புதுச்சேரி லோக் நிவாசிலும், துணைநிலை ஆளுநர் தலைமையில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், வன்முறை எதிர்ப்பு உறுதி மொழி ஏற்றனர். தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலர் திரு. சரத் சௌஹான் தலைமையில் வன்முறை எதிர்ப்பு தின உறுமொழி ஏற்கப்பட்டது.

*நட்டா காசநோய் (15)*

இந்தியாவின், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம், இது தொடர்பான உலகின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாகத் திகழ்வதாக, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார். ஜெனீவாவில் நடைபெற்ற உலக சுகாதார பேரவையின் 79ஆவது அமர்வில், நுரையீரல் ஆரோக்கியம் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசுகையில், இந்தியாவில் வீடு வீடாகச் சென்றும், சமூக அளவிலான பிரச்சாரங்கள் மற்றும், நடமாடும் குழுக்கள் மூலமாகவும், காசநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து குணப்படுத்தப் படுவதாக கூறினார். காசநோய் மற்றும் இதர நுரையீரல் நோய்களை கண்டறிவதற்கான நவீன வசதிகளையும் அரசு மேம்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார். கையடக்கமான நோய் கண்டுபிடிப்புக் கருவிகள், மற்றும் AI பகுப்பாய்வு வசதியுடன் கூடிய டிஜிட்டல் எக்ஸ்-ரே சேவைகளும் இதில் அடங்கும் என்று அவர் கூறினார். நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான புதுமைப் படைப்புகள், கடைக்கோடி மனிதன் வரை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று திரு. ஜே.பி. நட்டா மேலும் தெரிவித்தார்.

*அழகு சாதனம் (07)*

வெளிப் பயன்பாட்டிற்கான அழகு சாதனப் பொருட்களை, நுகர்வோர், தொழில்முறை மருத்துவர்கள் அல்லது அழகு நிலையங்கள், ஊசி மருந்தாகப் பயன்படுத்த அனுமதி இல்லை என, மருந்துகளுக்கான மத்திய அரசின் CD-SCO தரக் கட்டுப்பாட்டு அமைப்பு கூறியுள்ளது. மனித உடலின் புற அழகு மற்றும் தோற்றப் பொலிவைக் கூட்டத் தான் அழகு சாதனப் பொருட்களே தவிர, சிகிச்சை மருந்து அல்ல என்றும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

***பள்ளி நிர்வாகம் (08)***

பள்ளி நிர்வாகத்தில் சமூகப் பங்கேற்பை வலுப்படுத்துவதற்கான, மத்திய அரசின் புதிய, பள்ளி மேலாண்மைக் குழு வழிகாட்டு நெறிமுறைகள், அரசிடம் உதவி பெறாத தனியார் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று, மத்திய கல்வி அமைச்சகம் தெளிவு படுத்தியுள்ளது. ஆயினும், இத்தகைய பள்ளிகள், தாங்களே முன்வந்து, சமூகப் பங்கேற்புடன் கூடிய பள்ளி மேலாண்மைக் குழுக்களை அமைக்க, ஊக்குவிக்கப் படுவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அமைச்சகம் கூறியுள்ளது.

***வானிலை (12)***

வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி—காரைக்கால் பகுதிகளிலும் வரும் 27ஆம் தேதி வரை மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், தமிழகத்தின் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரி—காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, ஈரோடு, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

***ஐபிஎல் (10)***

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் நடைபெறும் போட்டியில், சென்னை—குஜராத் அணிகள் மோதவுள்ளன. குஜராத் அணி ஏற்கனவே ப்ளே—ஆஃப் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில், ப்ளே ஆஃப் சுற்றுக்கான 4ஆவது அணியாக, தகுதி பெறுவதற்கான வாய்ப்புகளை வலுப்படுத்திக் கொள்ளும் முனைப்புடன், சென்னை அணி இன்றைய போட்டியில் களம் இறங்குகிறது. இதற்கிடையே, கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற போட்டியில், கொல்கத்தா அணி, 4 விக்கெட் வித்தியாசத்தில், மும்பை அணிக்கு எதிராக வெற்றி பெற்று, ப்ளே ஆஃப் சுற்றுக்குத் தகுதி பெறுவதற்கான, நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

***ஊக்க மருந்து (10)***

ஊக்க மருந்து உட்கொண்டதாக கண்டறியப்படும் விளையாட்டு வீரர்கள், இத்தகைய மருந்துகளின் கடத்தல், விநியோகம், மற்றும், விற்பனையில் சம்பந்தப் படாதவர்களாக இருந்தால், கிரிமினல் குற்றச்சாட்டுகளைத் தவிர்க்கலாம் என்பதாக, anti-doping விதிமுறைகளில் உத்தேசிக்கப் பட்டுள்ள திருத்தங்களை, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம், பொதுமக்களின் கருத்துக்கு வெளியிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினர் இது குறித்த தங்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை, அடுத்த மாதம் 18ஆம் தேதி சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

***முதலீட்டாளர் மோசடி (14)***

குஜராத், மகாராஷ்டிரா, கோவா உள்ளிட்ட ஏழு மாநிலங்களில், முதலீட்டாளர் பண மோசடி தொடர்பாக, நிலுவையிலுள்ள 53 வழக்குகளை ஒரே தொகுப்பாக எடுத்து விசாரிக்க கோரி, குற்றம் சாட்டப்பட்ட இருவர் தாக்கல் செய்த மனுவை, விசாரணைக்கு ஏற்க, உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. வேகமான விசாரணை என்ற பெயரில், இத்தகைய வழக்குகளை ஒன்றாக விசாரிப்பதால், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமாக அமையுமே தவிர, பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது என்று தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு இன்று தமது உத்தரவில் கூறியது. குற்றம் சாட்டப் பட்டவர் ஒருவராகவே இருந்தாலும், இத்தகைய ஒவ்வொரு வழக்கின் தன்மைகள் வேறுபட்டவை என்றும், நீதிபதிகள் கூறினர். கவர்ச்சியான திட்டங்களை நம்பி, முதலீட்டுப் பணத்தை இழந்தவர்களின் உரிமைகள், புதிய கிரிமினல் சட்ட திருத்தங்களில் வலியுறுத்தப் பட்டுள்ளதை, தலைமை நீதிபதி சுட்டிக் காட்டினார்.